சென்னை

சரணாகதி மந்திரிகள்.

இன்னும் எத்தனை நாள்?

இன்றைக்கு

328-வது நாள்.


# விடுதலை.

ஈரோடு 1938-ஞ ஜூன்-மீ 7-உ

செவ்வாய்க்கிழமை


# ஹிந்தி பக்தர்கள் பிதற்றல்களுக்கு பதில்.

## II

மெஜாரட்டி கட்சியார் முடிவுகளுக்கு மைனாரட்டி கட்சியார் பணிந்து தீரவேண்டுமென்றும், அதுவே ஜனநாயக முறையென்றும் காங்கரஸ்காரர் ஏழு மாகாணங்களில் மெஜாரட்டி பெற்றிருப்பதினால் காங்கரஸ் மந்திரிகள் செயல்களுக்கு அப்பீலே கிடையாதென்றும், மெஜாரட்டி கட்சியார் ஹிந்தி கட்டாய பாடமாக வேண்டுமென்று கூறுவதை மைனாரட்டி கட்சியார் ஒப்புக்கொண்டு தானாகவேண்டுமென்றும், தமிழன் எனக் கூறிக் கொள்ளும் ஒருவர் தமிழன் எனக் கூறிக் கொள்ளும் ஒருவரை ஆசிரியராகக் கொண்ட ஒரு தமிழ் வாரப் பத்திரிகையில் கிண்டலாக எழுதியிருக்கிறார். "அம்மைக்கு பிரஸவ வேதனை மகளுக்கு வீணைவாயனை" என்று மலையாளத்தில் ஒரு பழமொழியுண்டு. அதாவது தாயார் பிரஸவ வேதனையால் கஷ்டப்பட்டுக்கொண்டு இருந்த போது மகள் வீணை வாசித்து உல்லாஸமாகப் பொழுது போக்கிக் கொண்டிருந்தாளாம். ஹிந்தி கட்டாய பாடமாக்கப் படுவதை எண்ணி உண்மைத் தமிழர்கள் உயிர் துடி துடித்துக் கொண்டிருக்கையில் ஹிந்தி எதிர்ப்பைப்பற்றி கிண்டலாக எழுதத் துணிவுகொள்ளும் அசத்தமிழன் செயல் அந்தப் பழமொழிக்கு ஒப்பாகவே இருக்கிறது. இத்தகைய புல்லுருவிகளால் அவர்கள் பிறந்த குலத்துக்கு ஏற்படக் கூடிய தீமைகளை எல்லோரும் உணரக் கூடுமாதலின் அவைகளை விளக்கிக் கூற நாம் எண்ணவில்லை. அவர்களது வாதத்தின் ஆபாசத் தன்மையை மட்டும் இங்கு விளக்கிக்காட்ட விரும்புகிறோம்.

### காங்கரஸ் மெஜாரட்டி யோக்கியதை.

ஏழு மாகாணங்களில் இப்பொழுது காங்கரசுக்கு மெஜாரட்டியிருப்பது வாஸ்தவமே. ஆனால் அந்த மெஜாரிட்டியின் யோக்கியதை என்ன? வாக்காளர் அளித்த வாக்கு புத்திசாலித்தனமான வாக்கா? காங்கரஸ்காரர் அபேட்சகர்களின் பேரைச் சொல்லியும் அவர்கள் 'யோக்கியதைகளை விளக்கியும் "வோட்டு"க் கேட்டதுண்டா? சட்டசபைக்குச் சென்றால் தாம் செய்யப்போவதைப் பற்றியாவது வாக்காளர்களுக்குக் காங்கரஸ்காரர் விளக்கிக் கூறியதுண்டா? பதவியேற்கப்போவதாக முன்னாடியே தெரிவித்ததுண்டா? பதவியேற்கும் விஷயம் பின்னால் முடிவுசெய்யப்படுமென்று தானே காங்கரஸ்காரர் பித்தலாட்டம் செய்தார்கள்? தாம் செய்யப்போவதை விளக்கிக் கூறாமல் வாக்காளர்களிடம் வோட்டுக்கேட்பது ஜனநாயக முறைக்கு முரணானதென்றும் இந்த ஏமாற்று வித்தையை ஜனநாயக ஆட்சி அமலில் இருக்கும் எந்த நாட்டிலும் காண முடியாதென்றும் அரசியல் ஞானமுடையவர்கள் எல்லாம் கண்டிக்க வில்லையா?

### வோட்டு வேட்டை மர்மம்.

ஐரோப்பிய சங்கத்தில் பத்திய அசம்பிளி மெம்பர் தோழர் ஜேம்ஸ் இந்த அயோக்கியத் தனத்தைக் கண்டித்துப் பேசியதற்கு எந்த ஆண்மையுடைய காங்கரஸ் வாதியாவது இதுவரை விடையளித்ததுண்டா? "மஞ்சள் பெட்டி மங்களகரமானது. அதில் வோட்டுப் போட்டால் நாடு செழிக்கும், வரிகள் ஒழியும். ஆறுகள் எல்லாம் பாலாய், நெய்யாய் ஓடும். பூசாரிகளுக்குக் கொடுக்கும் காணிக்கை கடைசியில் கடவுளிடம் சென்று சேர்வது போல மஞ்சள் பெட்டியில் போடும் "வோட்டு" கடைசியில் காந்தியாரிடம் சேரும்" என்றெல்லாம் பொய்ப்பிரசாரம் செய்து தானே காங்கரஸ்காரர் "வோட்டு"க் கேட்டார்கள்? காங்கரஸ்காரருக்கே வோட்டுப் போடுவதாக அப்பாவிகளான கிராமவாசிகளிடம் மாரியம்மன் பேரால், பெரியபாளயத்து ஆத்தாள் பேரால், கறுப்பணசாமி பேரால், காளி கூளி, காட்டேரி பேரால், சத்தியம் வாங்கித்தானே காங்கரஸ்காரர் 'வோட்டு'ப் பெற்றார்கள்? காங்கரஸ்காரர் அல்லாதார்களுக்கு வோட்டுப் போட்டால் "பிள்ளை குட்டிகள் செத்துப் போகும்; பாம்புகடிக்கும். பேயடிக்கும்" என்றெல்லாம் பயமுறுத்தித்தானே பாமர மக்களிடம் காங்கரஸ்காரர்கள் வோட்டுப்பறித்தார்கள்? எழுத்து வாசனையில்லாத கிராமவாசிகள்—அரசியல் உணர்ச்சியில்லாத கிராமவாசிகள் மஞ்சள் பெட்டிக்கு பூஜை செய்ய கற்பூர தீபாராதனை நடத்தி காணிக்கை போட்டு மஞ்சள் பெட்டியை நிரப்பியதை காங்கரஸ்காரர் ஒரு பெருமையாகப் பேசிக் கொள்ளவில்லையா? இவ்வாறெல்லாம் ஏமாற்றிப் பறிக்கப்பட்ட "வோட்டு"க்கும் அதனால் ஏற்பட்ட மெஜாரட்டிக்கும் மதிப்புண்டா?

### கைதூக்கிப் பொம்மைகள்

ஆட்களின் யோக்கியதைகளைச் சொல்லி வோட்டுக் கேட்டிருந்தால்—வாக்காளர்களும் முறைப்படி அரசியல் ஞானமுடையவர்களாயிருந்திருந்தால் இன்று சென்னை அசம்பிளியில் ஆச்சாரியாருக்குக் கைதூக்கும் பொம்மைகளாயிருந்து வருவோரில் பாதிப்பேராவது சட்ட சபைக்குள் நுழைந்திருந் திருப்பார்களா? இன்று சென்னை அசம்பிளியில் இடம் பெற்றிருப்பவர்களில் பாதிப் பேராவது தாம் தமது ஆயுட் காலத்தில் சட்டசபை மெம்பராவோமென்று எப்போதாவது எண்ணிருப்பார்களா? சிறை புகுந்தவர்களே, தடியடிபட்டவர்களே தியாகிகள், வீரர்கள், தேச பக்தர்கள் என்ற குருட்டு நம்பிக்கையை காங்கரஸ்காரர் பாமர மக்கள் உள்ளத்து உண்டுபண்ணிய காரணத்தினாற்றானே அநாமதேயர்களும் நிரக்ஷர குக்ஷிகளும் சந்திப் பிரசங்கிகளும் சட்டசபையில் புகும் பெருமை பெற்றார்கள்! இம்மாதிரியாக முதுகெலும்பில்லாதவர்களும் அரசியல் ஞானமில்லாதவர்களும் மாத சம்பளம் 75 வெள்ளிக் காசைத் தவிர ஜீவனத்துக்கு வேறு வழியில்லாதவர்களும் சட்டசபையில் இடம் பெற்றிருப்பதினாற்றானே கனம் ஆச்சாரியார் "யாமார்க்கும் குடியல்லோம் யமனை அஞ்சோம்" என ஹிட்லர் தர்பார் நடத்துகிறார்? இவ்வளவு யோக்கியதையுடைய மெஜாரட்டி கட்சியார் செய்யும் காரியங்களையெல்லாம் மைனாரட்டி கட்சியார் தலை வணங்கி வரவேற்க வேண்டும் எனக் கூறுவோர் பைத்தியகாரர்களாகவோ அரசியல் ஞானமில்லாதவர்களாகவோ இருக்க வேண்டுமெனக் கூறினால் அது தப்பாகுமா?

### சுயராஜ்யமா?

### பார்ப்பன ராஜ்யமா?

"காங்கரஸ்தான் இந்தியாவின் ஏக பிரதிநிதி ஸ்தாபனம்; காங்கரஸ்காரர் நாட்டுக்கு நன்மையானதைத் தவிர தீமையான எதுவும் செய்ய மாட்டார்கள்; காங்கரஸ்காரரை பூரணமாக நம்ப வேண்டியதுதான்" என வேறொரு சாரார் கூறுகிறார் சரி. அவர்கள் கூற்றை அலசிப் பார்ப்போம். காங்கரஸ் விரும்புவது பூரண சுயராஜ்யமோ அபூரண சுயராஜ்யமோ எதுவனாலும் ஆகட்டும். ஆனால் தென்னாட்டைப் பொறுத்த வரையில் அக்ரகார மந்திரி சபையார் விரும்புவது பார்ப்பன ராஜ்யம் தானே? "காங்கரஸ் துரோகி" என வெறுக்கப்பட்ட ஒருவர் சாக்கடை வழி சட்டசபைக்குள் புகுந்து மந்திரியானது பூரண சுயராஜ்யமா? அபூர்ண சுயராஜ்பமா? பார்ப்பன ராஜ்யமா? மூன்றுமுறை கார்ப்பரேஷன் காங்கரஸ் கட்சியாரால் கல்வியதிகாரி பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பிள்ளையை அலக்ஷயம் செய்துவிட்டு ஒரு அய்யரைக் கல்வியதிகாரியாக்கியது எந்த தினுசு ராஜ்யம்? பள்ளிக்கூடத் தலைமையாசிரியர்கள் 10 பேரில் 9 பேர் பார்ப்பனர்களாக பொறுக்கி எடுக்கப்பட்டது எந்த தினுசு ராஜ்பம்? மலை விழுங்கி மகாதேவர்களான பார்ப்பனர்கள் காங்கரஸ் பேரைச் சொல்லி ஒழுங்கீனமான முறையில் பணந்தேடி குபேர வாழ்க்கை வாழ்ந்து வருகையில் அவர்களையெல்லாம் சும்மா விட்டு விட்டு பார்ப்பனரல்லாதார் சிலர் மீது மட்டும் லஞ்சக் குற்றம் சாட்டி ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக் குப்புற வீழ்த்தியது எந்த தினுசு ராஜ்யம்? பார்ப்பனரல்லாதாரைக் கவிழ்க்கும் திருப்பணியை பார்ப்பனரல்லாதாரைக் கொண்டே ஆற்றியது எந்த ரக ராஜ்யம்? கௌரவ சர்ஜன்களை நியமித்தும் பப்ளிக்பிராசிக்கூட்டர் நியமன அதிகாரத்தைப் பார்ப்பன ஆதிக்கம் கொண்ட வக்கீல் சங்கங்களுக்கு நல்கியும் பார்ப்பன ஆதிக்கத்தை வளர்க்கச் சூழ்ச்சி செய்வது எந்த ரக ராஜ்யம்? இத்தகைய பார்ப்பனக் கொடுமைகள் பட்டப்பகலில் நடந்து வருவதைக் கண்ணுற்றும் "காங்கரசே இந்தியாவின் ஏக பிரதிநிதி ஸ்தாபனம்; நாட்டுக்கு நன்மை செய்யக் கூடியது காங்கரசே; காங்கரஸ்காரர் செய்வதை எவரும் ஆட்சேபிக்கக்கூடாது" எனக் கூறுவோர் புத்திசாலிகளா? மூடர்களா? வஞ்சகர்களா? என்பதை தேச மக்களே முடிவு செய்து கொள்ளட்டும்.

## தோழர் கெ. என். ஸ்டாலின் ஜெகதீஸ் தேக நிலை.

—:0:—

### இன்று (6-6-38) 37-ம் நாள் பட்டினி.

(நமது நிருபர்)

சென்னை, ஜூன் 6.

தலைவர்கள் ஈ. வெ. ரா. சௌந்தரபாண்டியன், திருச்சி விஸ்வநாதம், சிவராஜ், நாகை மணி, எஸ். வி. லிங்கம் முதலானவர்கள் தோழர் ஸ்டாலின் ஜெகதீஸ் அவர்களிடம் நெடுநேரம் தங்கியிருந்தார்கள். நேற்று 5-6-38 மாலை 4-30 மணிக்கு சென்னை பீப்பில்ஸ் பார்க்கில் இருந்து ஹைக்கோர்ட்டுக் கடற்கரைக்குப் புறப்பட்ட பிரமாண்டமான ஊர்வலத்தில் தோழர் ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டார்கள். ஊர்வலத்தில் 3000 பேர் வரையில் கலந்து கொண்டார்கள். கடற்கரையில் 10000 (பதினாயிரம் பேர் வரையில்) கலந்துகொண்டார்கள். ஸ்டாலின் அவர்களும் இரவு 10